# யாழ்-நூல் நிலையத்தில் வண. பிதா லோங் அவர்களது

# உருவப்படத் திரைநீக்கம்

காதரா மகரதலைதக காககாவட்டால
அலதக் காக்கிறவன் கணவிழிப்பதுவியர்த்தம

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஸூ ஆவணிமீ 10-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம 15 | 30-ம் இல.



சென்ற ஆடிமாதம் 31-ந் திகதி புதன்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்நகர மக்கள் சமயவித்தியாசமின்றி அன்பினுலும் நன்றி உணர்ச்சியினுலும் தூண்டப்பட்டு, மிகத் திரளாக ஒன்றுகூடி யாழ்நகர நூல்நிலையம் ஒன்றை மிகச் சிறப்பாகக் கட்டி எழுப்பி நடப்பிப்பதற்குத் திட்டமிட்டு நிதிதிரட்டி உதவிய வண. பிதா ரி. எம். எவ். லோங் அவர்களது பிரதிமைப்படம் திரைநீக்கம் செய்து அப்பெரியாருக்கு நன்றிபாராட்டி அவருடைய ஆன்மசாந்திக்கு இறைவனை மன்ருடிக்கொண்டனர். திரைநீக்கம் உள்ளூர் ஆட்சி மந்திரி திரு. திருச்செல்வம் அவர்களே செய்தார். நகர ஆணையாளர் திரு. தங்கவேலு அவர்கள் முதன்முதல் அங்கு கூடியிருந்த சகலரையும், விசேஷ முறையில் மந்திரியவர்களையும் வரவேற்று வண. லோங் சுவாமியார் யாழ்ப்பாணத்தில் 25 வருடகாலமாகக் கல்வித்தொண்டும் சமூகதொண்டும் ஆற்றிவந்து தம்மை ஒரு யாழ்ப்பாணத்தவனுக்க் கருதிவாழ்ந்த அரும் சிறப்பைப் புகழ்ந்துரைத்தார். உள்ளூர் ஆட்சி மந்திரியார் திரு. திருச்செல்வம் சுவாமியாரது படத்தைத் திரைநீக்கம் செய்யுமுன்னர் அவரது நண்பரென்ற பான்மையிலும் பிறரிடம் அவரைப்பற்றிக் கேட்டறிந்தவற்றிலுமிருந்து சுவாமியாரது வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட பல நிகழ்ச்சிகளை நகைச்சுவையுடன் எடுத்துரைத்தார். மேலும் இன்று சாதிமத வித்தியாசமின்றிக் கூடி ஒரு பொது நோக்கத்துக்கு ஆதரவு அளித்ததுபோல் தமிழ்மக்கள் யாவரும் என்றும் சகலத்திலும் ஒத்துழைக்க அவர்களைக்கேட்டுப் பலத்த கரகோஷத்திடையே உருவப்படத் திரைநீக்கம் செய்தார். அதன்பின் சிற்றுண்டி உபசாரம் நடந்தது. ஈற்றில் யாழ்நகர நூல்நிலைய அதிபர் திரு. பாகவிபநாதர் சபையோருக்கு நன்றி கூறியதுடன் வைபவம் முடிவு எய்தியது.

## கிறிஸ்தவ ஒற்றுமையின் முதல் அதிர்ச்சி

தற்போது ஆங்கில கிறிஸ்தவ சபையினர் தமது சபைக்கருமங்களைப் புதுப்பிக்கும் நோக்கத்துடன், "லம்பபெத் மகாநாடு" கூடியிருக்கின்றனர். இதில் 12 பிரபல்ய கத்தோலிக்கர் அவதானிகளாக அழைக்கப்பட்டிருக்கின்றனர். கத்தோலிக்கரைவிட அங்கிளிக்கன் சபைக்குப் புறத்தே இதுவரை காலமும் இருந்துவந்த பல் வேறு சபையினரும் கத்தோலிக்கரைப் போலவே அழைப்புப் பெற்றிருக்கின்றனர். மகாநாடு கூடுமுன் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் டக்றர் ரூம்சே அவர்கள் வத்திக்கான் சங்கத்தினுல் ஏற்பட்ட விளைவுகளைப் புகழ்ந்துரைத்தார். "ஒற்றுமையின் முதல் அதிர்ச்சி தோன்றிவிட்டது. பழையகால தூக்கத்திலிருந்து யாவரும் விழித்தெழுந்து விட்டோம். தேவன் நமக்கு எவற்றைக் கைவிடவேண்டும் எவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுமாறு பிரார்த்திப்போமாக" என்ருர்.

### விவாகம் செய்துகொண்ட ஒருவர் குருவாகவர இருக்கின்ருர்

அவுஸ்திரேலியா தேசத்தில் தஸ்மேனிய பிரிவில் சில வருடங்களின் முன் அங்கிளிக்கன் சபைக்குருவாக இருந்த பீற்றர் ஜெஸ்ரோன் என்பவர் தமது மனைவி பிள்ளைகளுடன் கத்தோலிக்க சமயத்தில் அண்மையில் சேர்ந்திருக்கின்ருர். அவர் கத்தோலிக்க குருவாக அபிஷேகம் செய்யப்படவிரும்பி பாப்பரசருக்கு மனுச்செய்து அதற்கு உத்தரவும் பெற்றிருக்கின்ருர். அவருக்கு ஒரு விசாரணைப்பங்கில் வேலை கொடுக்கப்படுமென்றும், தமது குடும்பத்தவர்களுடன் வசித்துவர அனுமதிக்கப்படுவாரெனவும் அவுஸ்தரேலிய தேச அதிமேற்றிராணியார் யங் அடிகளார் கூறியிருக்கின்ருர்.

### சர்வதேச கத்தோலிக்க மகாநாட்டுக்கு அக்குவைனஸ் அதிபர் செல்கிருர்

"அக்குவைனஸ்" சர்வகலாசாலைக் கல்லூரி அதிபராகிய வண. ரிசா பாலசூரியா சுவாமியார் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் சர்வகலாசாலை கத்தோலிக்க கலாச்சார மகாநாட்டில் பங்குபெறுவதற்காகச் சென்ற மாதம் 26 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டிருக்கிருர். இம் மகாநாடு பென்சில்வேனியா பிரதேசத்திலுள்ள பிலடெல்பியா நகரில் நடைபெறவிருக்கிறது. மகாநாட்டில் முக்கியவிஷயமாக நால்வகை வறுமைகளைப்பற்றி ஆராயப்படும். அவை அறிவு, சமூகம், பொருளாதாரம், ஒழுக்கம் என்பன இல்லாத வறுமைகளாம். ஒழுக்க வறுமையைப்பற்றி ஆராயும்பகுதிக்குத் தலைமை தாங்கும்படி சுவாமியார் அழைக்கப்பட்டிருக்கிருர்.

## செக்கோசிலவாகியா— ருஷிய சம்பாசணைகள்

செக்கோசிலவாகியா தேசத்தின் புதிய கொமியூனிஸ்த தலைவர்கள் ஜனநாயகபோக்கு உடையவர்கள் என்பதையும் இப்போக்கை ருஷியதலைவர்கள் எதிர்க்கின்ருர்கள் என்பதையும் இன்று யாவரும் அறிவர். ஆனுல், ஹங்கேரியில் நடந்துகொண்டது போல ருஷியா செக்கோசிலவாகியாவில் தனது படைகளை அனுப்பி அத்தேச தலைவர்களின போக்கை நசுக்கி வைக்காதது பெரும் ஆச்சரியமாக இருக்கின்றது. அப்படிச்செய்யாது இரு தேசதலைவர்களும் உச்சிமகாநாடு கூடி தத்தம கொள்கைகளை ஏற்றுக்கொள்ளச் செய்யமுயற்சிக்கின்றனர். தறபோது ருஷியாவுடன் மகாநாடு முடிந்ததும் மறு கிழக்குப்புற கொமியூனிஸ்த தலைவர்களுடன் செக்கோசிலவாகியா உச்சிமகாநாடு கூடவேண்டி ஏற்பட்டிருக்கின்றது. இதன்பயன் எனனவாகப் போகின்றது என்பதை அகில உலகமும் மிகவிழிப்பாக அவதானித்து வருகின்றது. செக்கோசிலாவாகியாவில் இன்று நடப்பது உலக சரித்திரத்தின போக்கில் ஒரு பிரதான கட்டமாகும்.

## புறக்கோட்டை, புனித பிலிப்புநேரியார் கோவிலில் யூபிலிக் கொண்டாட்டம்

சென்ற 13 ஆண்டுகளாகக் கொழும்பு புறக்கோட்டையிலுள்ள புனித பிலிப்புநேரியார் கோவிலில் பரிசுத்த சற்பிரசாதச் சபைக்குருமாரின் பரிபாலனத்தில் இருந்துவருகிறது. இலங்கைப் பிரிவுக்குத் தலைவராக வண. பற்றிக் பிறஸ் ஜெறல்ட் சுவாமியார் கடமையாற்றி வருகின்ருர். இவருடைய குருத்துவ வெள்ளியூபிலி மிக ஆடம்பரமாகச் சென்ற சனிக்கிழமை அக்கோவிலில் கொண்டாடப்பட்டது. அந்நாள் ஒரு சாதாரண வேலைநாளாய் இருந்தபொழுதிலும் பக்தர்களால் கோவில் நிரம்பி வழிந்தது. இக்குருமார் இப்பகுதியில் செய்துவரும் அரிய சேவையை மக்கள் மிக மெச்சுகிருர்கள் என்பதைத் தெளிவாகக் காட்டிற்று. ஐந்து குருமார் ஒப்புக்கொடுத்த கூட்டுப்பூசையே அவ்வைபவத்தின் முக்கிய பாகமாக விளங்கியது. பிரசங்கத்தின் போது, சற்பிரசாத நாதர்மேல் மக்களின் பக்தியை வளர்த்துவர இச்சபையினர் செய்துவரும் பிரபத்தனங்களை விளக்கி இத்தொண்டில் சேர்ந்துகொள்ள இளைஞருக்கொரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

> "மனிதன் ஒருவன்தான் சிரிக்கும் தகுதிபெற்றவன். அதே நேரத்தில பிறர் பார்த்துச் சிரிக்கத்தக்க நிலையில் உள்ளவனும் அவனே." — Greevile

## விவாகம்செய்த டீக்கன்மார் பொகொட்டாவில் பட்டம்பெறுவர்

இம்மாதம் பரிசுத்த தந்தை தென் அமெரிக்க கொலம்பியா மாகாணத் தலைப்பட்டணமாகிய பொகொட்டாவுக்கு விஜயம்செய்யும்போது 28 விவாகம்செய்த ஆண்மக்களுக்கு டீக்கன் பதவிகள் சூட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குருமாரில்லாத் தட்டுப்பாட்டை இப்பகுதியில் ஒரு அளவில் சமாளித்துக்கொள்ளத் திருச்சபை இக்காலத்தில் எடுக்கும் முதற்படிகளாக இது விளங்கும். உலகிற் சில பகுதிகளில் தன்னியர் மட அதிபர் சற்பிரசாதம் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதையும் நேயர்கள் அறிவர். விவாகம் செய்த ஆண்மக்கள் டீக்கன்பதவி பெற்றதன்பின் டீக்கன்மார்களாகவே இருப்பார்களேதவிர குருமார் பெறும மேற்பட்டங்களுக்கு உரிமை இல்லாதவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆவணி—1968

11 ஞா. பரி. ஆவி விழாவுக்குப்பின் 10ஆம் ஞாயிறு [ப]
12 தி. புனித கிளாரம்மாள் [வெ]
13 செ. கிழமைப் பூசை [ப]
14 பு. புனித கன்னிமரியின் விண்ணேற்ப விழாவின் திருவிழிப்பு [ஊ]
15 வி. புனித கன்னிமரியின் விண்ணேற்பு [வெ]
16 வெ. புனித கன்னிமரியின் தந்தையாகிய புனித யுவக்கீன் [வெ]
17 ச. புனித இயாசிந்து [வெ]


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம் ஞூ ஆவணி மீ 10-ங்வ


## நற்கருணை விருந்து

கத்தோலிக்கர் வாழ்விலும் வழிபாட்டிலும் தேவநற்கருணை எத்தகைய உந்நத இடம் வகித்து வருகிறதென்பது வெள்ளிடைமலை. ஆனால், அது ஏற்படுத்தப்பட்டதன் முதன்மையான காரணம் பீடத்தில் வைத்து வழிபடுவதற்கல்ல, உட்கொள்வதற்காகவே என்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர். கடந்த ஐந்து பாப்புமாரின் ஆட்சிக்காலத்திலும் மிகவும் வலியுறுத்தப்பட்டு, அனுசரிக்கவேண்டிய உபவாச ஒழுங்குகளும் தளர்த்தப்பட்டு, விரும்பிய நேரத்திலெல்லாம் பூசை ஒப்புக்கொடுக்க வசதியிருக்கும்போது தேவநற்கருணை உட்கொள்ளாதிருப்பது ஏன்? குருவானவரைப் போலவே சகலரும் நற்கருணை விருந்தில் பங்குபற்றினாற்றான் பலி பூரணமாயிருக்கும் எனத் திருச்சபை படிப்பிக்கிறது. இதைப்பற்றி அறியாத காரணத்தாலா?

பழைமையான முறைகளை பின்பற்றும் ஒரு சிலர் இன்றும் எங்கள் மத்தியில் இருப்பதுண்மை. இவர்கள் பெரும்பாலும் வயதில் மூத்தவர்கள். பழைய வழக்கங்களைவிட மனதில்லாதவர்கள். இவர்கள் இன்னும் நள்ளிரவு தொடக்கம் உபவாசம் பிடிக்காவிட்டால் அல்லது முதலில் பாவசங்கீர்த்தனம் செய்யாவிட்டால் நற்கருணை பெற விரும்புவதில்லை. ஆனால், அற்ப பாவங்களுக்குப் பாவசங்கீர்த்தனம் அவசியமில்லை என்பதை நன்கு உணர்ந்துவிட்டால் இவர்கள் தினசரி நற்கருணை பெறுபவர் ஆகிவிடுகின்றனர்.

ஆனால், மற்றவர்களோ? இவர்களுக்கு பழைய முறைகள் தெரிந்துகூட இருக்காது. பூசைதொடங்கி ஏறக்குறைய அரை மணித்தியாலத்தின் பின்னரே சற்பிரசாதம் கொடுக்கப்படுகிறது. கோவிலுக்குச் செல்வதற்குப் பதினைந்து நிமிடம் எடுத்தால், மிகுதி பதினைந்து நிமிடம் தான் உபவாசம் காக்கவேண்டிய நேரம். இது எவருக்கும் முடியாததொன்றல்ல.

சிலர், முக்கியமாக இளைஞர் ஒருவிதமான சோம்பேறித்தனத்துக்குட்பட்டிருக்கின்றனர். தம்முடைய வசதியான இடத்தை விட்டு எழுந்து செல்வது அவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. சகலரும் நற்கருணை பெறும்படி தூண்டப்படும் இந்நாளில் விதிகள் மிக இளக்காரமாயிருக்கும் இந்நாளில், ஒருவன் நற்கருணை பெறாதிருந்தால், அது அவனின் அசட்டைத்தனத்தைக் காண்பிக்கிறதன்றோ!

# உயிருள்ள விசுவாசம் —

(பி. ஜே. அமிர்தநாயகம்)

எங்களாண்டவராகிய யேசு இவ்வுலகில் மனுஷதோற்றத்தில் காட்சி கொடுத்தபோது அவர் அநேக புதுமைகளைச் செய்தார். ஆனால் பல தடவைகளில் அவர் புதுமைசெய்யமுன் "விசுவசிக்கிறாயா?" என்று கேட்டுத் தன் தெய்வீகத்தையும் தன் வல்லபத்தையும் வெளிப்படுத்தினார். "உன் விசுவாசத்தின்படியே ஆகட்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். கிறிஸ்துவர்கள் என்று சொல்லுகிறவர்களெல்லோரும் உண்மையான விசுவாசிகளா? அல்லது பெயரளவில் மாத்திரம் விசுவாசிகளா? விசுவாசிகளென்றால் எப்படிச் சீவிக்கவேண்டும்? கிறிஸ்துவால் சீவிப்பவனே விசுவாசி. கிறிஸ்துவில் சீவிப்பவனே விசுவாசி. கிறிஸ்துவோடு சீவிப்பவனே விசுவாசி. கிறிஸ்துவுக்காகச் சீவிப்பவனே விசுவாசி. எனவே சுயநலத்தை முற்றாகப் போக்கித் தேவசித்தத்தை எதிலும் தேடுகிறவனே விசுவாசி. தேவசித்தத்தை நாம் எப்படி அறிவது. இது மிகவும் இலேசானகாரியம். எங்களெல்லோருக்கும் ஓர் உன்னத எடுத்துக்காட்டு இருக்கிறது. அதுதான் மனிதனாய் அவதரித்த தேவன், அவர் யேசுக்கிறிஸ்து. அவர் கடவுளுடைய சித்தத்தைப் பூரணமாய்ச் செய்தார்.

### உன்னத எடுத்துக்காட்டு

யேசுவின் சுவிசேஷங்களை மிகவும் கவனமாய்ப் படிப்போம். அவர் எப்படிக் கடவுளின் சித்தத்தைச் செய்தார்? அவர் எப்படி பிதாவிலும், பிதா எப்படி சுதனிலும் சீவித்தார்களென அறியலாம். இதுவே கிறிஸ்து கடவுளில் காட்டின விசுவாச சீவியம். இதையே நாம் பின்பற்றவேண்டும். யேசுவே தனது உன்னத செபத்தில் இதைச் சொல்லியிருக்கிறார். "பிதாவே எப்படி நீர் என்னிலும் நான் உம்மிலும் சீவிக்கிறோமோ அப்படியே நாங்கள் இவர்களிலும் இவர்கள் எங்களிலும் இருக்கச் சித்தமாயிரும். இதுவே உண்மையான உயிருள்ள விசுவாசம். யேசு இவ்வுலகில் எப்படி கடவுளில் விசுவாசத்தை உயிருள்ளதாக்கினார்? முப்பது வருட சீவியத்தைச் சுவிசேஷகர்கள் மிகவும் சுருக்கமாகக் கூறிவிட்டார்கள். "அவர் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்." என்ன அழகான கடவுளின் சரித்திரம்' கீழ்ப்படிதல் மிகவும் உன்னத புண்ணியம். தனது பிதாவின் சித்தத்தையே செய்த யேசு கீழ்ப்படிதலின் உன்னத தன்மையைக் காட்டுகிறார். நாமும் நாளாந்தம் கீழ்ப்படிய அநேக நல்ல சந்தர்ப்பங்கள் உண்டு. எங்களுடைய சமூகக்கட்டுப்பாடுகள் சீரானதாயிருந்தால் அவைகளுக்கு அமைதலே உன்னத புண்ணியம். இதுவே உயிருள்ள விசுவாசம்.

### அமைச்சலும் தாழ்ச்சியும்

தேவாதிதேவன் தன்னால் படைக்கப்பட்ட மக்களைத் தேவமக்களாக்குவதற்கு இரு உன்னத புண்ணியங்களைத் தனனிடமிருந்து படிக்கும்படி போதித்தார். அவைகள் யாவை? சாந்தமும் தாழ்ச்சியும். எங்கு அவைகள் உருவாகும்? எங்கு அவைகள் செழிக்கும்? எங்கு அவை உண்மையான பலனளிக்கும்? எங்கு உண்மையான அமைச்சல் உண்டோ அங்கே உண்மையான சாந்தமும் தாழ்மையும் இருக்கும். எனவே உயிருள்ள விசுவாசி எல்லாவற்றிலும் தேவசித்தத்தையே தேடவேண்டும். அதற்கு விசேஷமாகச் சாந்தமும் தாழ்ச்சியுமுள்ள மனப்பான்மை இருக்கவேண்டும். இவ்விரு புண்ணியங்களும் தேவனின் அன்பின் ஆட்சிக்குள் கசப்பான கட்டுப்பாடின்றி மிகவும் இனிமையாகவும் இலேசாகவும் கிறிஸ்துவ சீவியத்தைச் சீவிக்கச் செய்கின்றன. கிறிஸ்துவனின் கடமைகள் அவனை நசுக்கவும் நிர்மூலமாக்கவுமல்ல, ஆனால் ஒவ்வொரு விசுவாசியையும் தேவனின் உன்னத பிள்ளைகளாக்கி மோட்ச உரிமைக்குச் சுதந்திரம் அளிக்கின்றன. தேவ சுதந்திரமே விசுவாசத்தால் உண்டாகும் அமைச்சலின் பலன்.

### யேசுவும் பகிரங்கசீவியமும்

யேசுவின் பகிரங்க சீவியத்தைப் படிப்போம். யேசு அழுவாரோடு அழுதார், மகிழ்வாரோடு மகிழ்ந்தார். குருடர் செவிடருக்கு இரக்கத்தைக் காட்டினார். விதவையின் கவலையைப் போக்கினார். தனது பிரசங்கத்தைக் கேட்ட திரளான மக்கள் வழியில் சோர்ந்து போவார்களோவெனக் கவலையாய் இருந்தார். பாவத்தில் பிடிபட்டுப் பலராலும் இகழப்பட்ட பெண்ணுக்குச் சமாதானம் அளித்து அனுப்பினார். நன்மை செய்வதிலேயே தனது காலத்தைக் கழித்தார். அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை வளரச் செய்தார். தன்னை முப்பது வெள்ளிக்கு விற்ற தனது சீஷனைக் கடைசிமட்டும "சிநேகிதா" என்ற அன்பின் நிறைவால் விளித்தார். கிறிஸ்துவுக்கு மரண தண்டனைதானும் விதித்த பிலாத்து அவரில் குற்றமொன்றையும் காணவில்லையென்று பகிரங்கமாய்க் கூறினார். கிறிஸ்துவின் சீவியம் கடவுளில உயிருள்ள விசுவாசத்தைக் காட்டினபடியால் எல்லாவற்றிலும் பிதாவின் சித்தத்தை மாத்திரம் தேடினார்.

### இதோ ஆண்டவரின் அடிமை

சகல புண்ணியங்களால் நிறையப்பெற்ற தேவனின் தாயான புனித மரியாளின் சீவியத்தைப் பார்ப்போம். சம்மனசானவர் அவவிடம் வந்து அவவுடைய அழைத்தலுக்கு அவவின் சம்மதத்தைக் கேட்கிறார். உடனே புனித மரியாள் தன் பூரண சம்மதத்தைக் காட்டி, "இதோ ஆண்டவருடைய அடிமை" என்கிறா. அடிமை என்பதின் அர்த்தமென்ன? கடவுளின் சித்தம் பூரணமாய்த் தன்மட்டில் நிறைவேறட்டும் என்பதேயாம். இதுவே பூரண உயிருள்ள விசுவாசம். புனித மரியாள் தனது சமூகம் மட்டில் எப்படி நடக்கிறா? இனசனரை நேசிக்கிறா. அவர்களின் கவலைகளிலும் சந்தோஷங்களிலும் கலந்து தன்னால் கூடிய உதவி புரிகிறா. வயதுபோன காலத்தில் புனித எலிசபேத் அம்மாள் கெற்பவதியாய் விட்டா என்ற சந்தோஷச் செய்தியைக் கேட்டவுடன் அவவைத் தேடிப்போய்ச் சந்திக்கிறா. கானான் தேசத்துக் கலியாணத்தில் இரசம் குறைந்துபோனதையிட்டுக் கவலைப்பட்டுக் குறைவை உடனே நிவர்த்திசெய்கிறா. தனது மகன் தேவன் என்பதையும் அவருடைய இரட்சணிய வேலைக்குத் தானும் விசேஷமாய் அழைக்கப்பட்டிருக்கிறா என்பதையும் எப்பொழுதும் காட்டி விசேஷமாய்ச் சிலுவை அடியில் கிறிஸ்துவுக்கு உன்னத சாட்சியாய் இருக்கிறா. இதுவே உயிருள்ள விசுவாசம், இதையே கடவுள் எங்கள் ஒவ்வொருவரிடமும் கேட்கிறார்.

### திருச்சபையின் சாட்சிகள்

கிறிஸ்துவும் திருச்சபையும் ஒன்று. எனவே கடவுளில் உயிருள்ள விசுவாசி திருச்சபைக்குச் சிறந்த சாட்சியாக வேண்டும். எனவே கிறிஸ்துவுக்காகச்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

**தூயஆவி வருகை 10-ம் ஞாயிறு.**

## திருச் செய்தி

[லூக். 18 : 9—14]

"தன்னை உயர்த்துபவன் எவனும் தாழ்த்தப்படுவான் ;
தன்னைத் தாழ்த்துபவன் எவனும் உயர்த்தப் படுவான்."

தம்மைத்தாமே நீதிமான்களென நம்பிப் பிறரைப் புறக்கணிப்பவர்களைப்பற்றி மீட்பர் யேசு சொன்ன உவமை:

உயர்வாளன் பரிசேயன், இழிவாலன் ஆயக்காரன்
இருபேருஞ் செபஞ்செய்யச் சென்றார்க ளாலயமே
பரிசேயன்பெருமையுடன் பலிபீடத் தருகுற்றான்
மறுஆயக் காரனுமோ முகப்பினிலே நின்றிட்டான்.

**பரிசேயன் நிமிர்ந்து நின்று செபித்தது:**

என்னைவிட உத்தமர்கள் எவருமிலை இப்புவியில்
கள்ளம் விபசாரம் செய்தறியேன் கர்த்தாவே
வாரமிரு நாளில் உபவாசம் செய்பவன்நான்
வருவாயிலொரு பாகஞ் தருமமாய்க் கொடுப்பவன்நான்
திருடர்துர்த்தர் தீங்காளர் அயல் நிற்கும்
வரியாளன் போன்ற குறையாளன் நானல்லன்
இன்றைப் போல்நான் இழிவாளன் அன்று அன்று
இறைவா உனக்கு என்றுமே நன்றியென்றான்.

**ஆயக்காரன் குனிந்து நின்று மார்பில்தட்டி:**

எங்கும் இருக்கும் இறைவா! முதல்வா!
எளியேன் என்மேல் இரக்கங் கொள்வாய்
நான்பெரும் பாவியே நானொரு தூசியே
வானுறை அரசே! வரமருள் வாயே
என்றே பணிந்து இரந்தே நின்றான்
நன்றும் எனவே நாடியே யுரைத்தான்.

இவர்களிருவரில் உயர்ந்தவன் எவனோ?
அவனே ஆயக் காரனென் போனே
உயர்வோர் தாழ்வர் தாழ்வோருயர்வர்
நயமுற மொழிந்தார் நாயகன் யேசு.

— ஆசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சரியம்மிக்க

# புனித லோறஞ்சியார்

ஐ. வின்சென்ற் டலிமா

இலங்கைத்தீவிற்கு என்று கத்தோலிக்க மதம் கொண்டுவரப்பட்டதோ, அன்றே புனித லோறஞ்சியாருக்கும் இவ்வழகிய தீவிற்குமுள்ள தொடர்பு உதயமாயிற்று. இதனுற்றான் போலும் பெரும்புகழ்படைத்த, போர்த்துக்கால் நாட்டைச்சேர்ந்த சரித்திரப்பேராசிரியர் கலாநிதி குயிறோஸ் புனித லோறஞ்சியாரை இலங்கையின் பாதுகாவலர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆவணித்திங்கள் பத்தாம்தேதி இவரின் திருநாளைக் கொண்டாடி நிற்கும் பொழுது இப் புனிதருக்கும் இயற்கை எழில் மிக்க இத்தீவிற்குமுள்ள தொடர்பினை ஆராய்தல் சாலச்சிறந்ததாகும்.

1505-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துக்கீய கூட்டத்தாரின் தலைவனுகிய லோறன்சோ டி அல்மெய்டா இப்புனிதரைக் கௌரவிக்கும் பொருட்டு, இவரின் ஞாபகார்த்தமாகத் தற்போதைய கொழும்புத்துறை



முகத்திற்கு அண்மையில் ஒரு சிறிய தேவாலயத்தைக் கட்டுவித்தான். இத்தேவாலயமே இலங்கையில் கட்டப்பட்ட முதற் தேவாலயமாகும். இதிலேயே முதற் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் ஒல்லாந்தர் இந்நாட்டைக் கைப்பற்றிக் கத்தோலிக்க தேவாலயங்களை அழித்தபொழுது இத்தேவாலயம் நிர்மூலமாக்கப்படலாயிற்று. அன்றுதொட்டுக் கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பல்வேறு இடங்கள் இப்புனிதரின் பெயரால் அழைக்கப்படலாயிற்று. இவற்றுள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது "புனித லோறஞ்சியார் மலை" யாகும். இவ்விடத்திலேயே சதாம் (Chatham Street) தெருவிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகக் கொழும்புநகரின் குடிசனச்செறிவு வளர்ச்சியடைந்து, அரசியல் உரிமைகளும் அளிக்கப்பட்டதுடன் புனித லோறஞ்சியார் கொழும்புநகரின் பாதுகாவலரானுர். 1954-ம் ஆண்டு ஆவணித்திங்கள் 21-ம் தேதி கத்தோலிக்க திருச்சபையின் சுற்றுநிருபத்தினுல், உத்தியோக பூர்வமாகக் கொழும்புநகரின் பாதுகாவலராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

அக்காலத்தில் நகரின் ஊர்வலங்கள் சகலவற்றிலும் இப்புனிதரின் கொடி கொண்டுசெல்லப்பட்டது. போர்த்துக்கீயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பாவித்த பலவகையான நாணயங்களிலும் இப்புனிதர் கையிலேந்தி நிற்கும் இரும்புக்கட்டிலின் சாயல் பொறிக்கப்பட்டிருந்தது. பிற்காலங்களில் இவரின் பெயர் கொழும்புநகருடன் பல்வேறு வழிகளிலும் ஈடுபடுத்தப்பட்டமையால் கொழும்புநகர் "புனித லோறஞ்சியார் நகர்" என்று சரித்திராசிரியர்களால் வர்ணிக்கப்படலாயிற்று.

கடந்த நானூற்றைம்பது ஆண்டுகளில் இத்தீவின் பல்வேறு பாகங்களிலும் இப்புனிதரின் பெயரால் இரண்டோ அல்லது மூன்றோ கோவில்களே கட்டப்பட்டுள்ளன. இவற்றுள், மிகவும் வனப்பு மிக்க ஐங்கோணத் தேவாலயம் வெள்ளவத்தையில் வானளாவி நிற்கின்றது.

வடமாகாணத்தில் யான் அறிந்தமட்டில் தலைமன்னாரில் இப்புனிதரின் பெயரால் ஒரு தேவாலயம் கட்டப்பட்டுள்ளது. இதன் சரித்திரத்தை ஆராயின் இஃது பழம்பெருமை படைத்தது என்பது புலனுகும். இதன் வளர்ச்சி தற்போதைய சேமக்காலையில் இருக்கும் பாழடைந்த தேவாலயத்துடன் சம்பந்தப்பட்டதாகும்.

ஒல்லாந்தர் இந்நாட்டைக் கைப்பற்றிக் கத்தோலிக்க தேவாலயங்களை அழித்தபொழுது, சேமக்காலையில் இருந்த இப்புனிதரின் பெயர்கொண்ட தேவாலயமும் அழிக்கப்பட்டது. ஆனல் இதனுடைய ஒருபக்கச் சுவர்மட்டும் இன்னும் அழிக்கப்படாது நிற்பது கண்கூடாகும். புனித லோறஞ்சியாரின் புதுமையினுல் இச்சுவர் ஒல்லாந்தரினுல் அழித்தற்குக் கடினமாக இருந்தமையால் அழிக்கமுடியாதுபோய்விட்டதாகத் தொன்றுதொட்டு ஒரு கதை வழங்கிவருகின்றது.

ஆதாரங்காட்டி நிரூபித்தாலொழிய எதனையும் நம்பமறுக்கும் இன்றைய உலகில் 1964-ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவம் தொன்றுதொட்டு வழங்கிவந்த இக்கதையில் இருக்கும் உண்மையை ஊர்ஜிதம்செய்வதாக அமைந்துள்ளது.

1964-ம் ஆண்டு முடிவில் வீசிய சூறாவளிக் காற்றினுல் திரிகோணமலை, பதவிய, மன்னர் போன்ற மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. மன்னர் சூறாவளியினுல் மட்டுமின்றி கொந்தளிக்கும் அலைகடலினுலும் சின்னபின்னமாக்கப்பட்டது. இத்துயா சம்பவம் நடந்து ஒருசில தினங்களில் நான் தலைமன்னருக்குச் சென்றிருந்தபொழுது அங்கு நடந்திருந்த அழிவினை அறியும்பொருட்டுக் கடற்கரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது முன்னர் நூல்நிலையம் இருந்த கட்டிடத்தில் வானொலிச் சப்த அலைகளைக் கிரகிப்பதற்காக நாட்டப்பட்டிருந்த உயர்ந்த இரும்புக்கம்பம் காற்றின் வேகத்தைத் தாங்கொணுது நிலத்தை முத்தமிட்டு நிற்பதைக்கண்டேன். நூல்நிலையம்சூறாவளியினுல் பாதிக்கப்பட்டுப் பாழடைந்த நிலையில் காட்சியளித்தது. சிறிது அப்பாற் சென்றபொழுது 1962-ம் ஆண்டில் கோவிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மதிலின் பின்பக்கச் சுவரின் ஒரு பகுதி கடல்நீரினுல் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. பாரிய மரங்கள் பலவும் கோவிலுக்கு அணித்தாகநின்ற அநேகம் தென்னைகளும் இயற்கையின் கோபத்திற்குப் பலியாகி இருப்பதைக்கண்டேன். ஆச்சரியம், கோவிலைவிடக் கடலுக்கு அணித்தாகச் சாதாரண கற்களாலும் சுண்ணத்தினுலும் கட்டப்பட்டிருக்கும் இப்பழைய தேவாலயத்தின் சுவர்மட்டும் எவ்வித சேதமுமின்றிக் கம்பீரமாகக் காட்சியளித்து நின்றது. இச்சுவருக்கு அண்மையில் இருக்கும் சிமெந்தினுல் கட்டப்பட்ட சில கல்லறைகள்கூட இடிந்திருப்பதை அவதானித்தேன். புதைபொருள் ஆராய்ச்சியாளரின் கண்களுக்கு விருந்தாக இச்சுவர் விளங்குகின்றது என்றுல் மிகையாகாது.

கட்டிடங்கள், மரங்கள், இரும்புக் கம்பம் இவற்றிற்குச் சேதம் விளைத்த இயற்கை ஏன் இச்சுவரைமட்டும் பதம் பார்க்கவில்லை? என்ற கேள்விக்குறி என்னை அறியாமலேயே எழுந்துநின்றது. ஆச்சரியம் தாங்கொணுது இச்சுவரைத் தா[illegible] அடைந்தபொழு[illegible] கொந்தளிக்கும் அலைகடலும்கூட இப் புனிதரின் புகழை உலகிற்குப் பறை[illegible] என்ற எண்ண[illegible] மனத்தை ஊடுருவிப் பாய்ந்தன.

# புனித இராயப்பரின் எலும்புகள்

## புதைபொருளாராய்ச்சி முடிவுகள்

புனித இராயப்பர் பேராலயத்தின் அடியில் ஒரு சுவர் மாடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புத் துண்டுகள் புனித இராயப்பருடையவையே என்று பாப்பு 6ஆம் சின்னப்பர் கடந்த ஜூன் 29ஆம் நாள் அறிவித்தார்.

ரோமைப் பல்கலைக்கழகத்தின் புதைபொருளாராய்ச்சித் துறைத் தலைவர் பேராசிரியை மார்க்கரீத்தா குவார்துச்சி அம்மையார் புனித இராயப்பர் பேராலயத்தின் அடியில் புதைபொருளாராய்ச்சிகள் நடத்தி அங்குள்ளசுவர் மாடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புத் துண்டுகள் புனித இராயப்பருடையவையே என்று விஞ்ஞான முறையில் முடிவு கூறியுள்ளார்.

புனித இராயப்பர் கி. பி. 67ஆம் ஆண்டில், வத்திக்கான் குன்றின்மீதுள்ள நீரோவின் திடலில் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டார். இந்தத் திடலின்மீது புனித இராயப்பர் பேராலயம் கட்டியெழுப்பப்பட்டது. ரோமையின் முதற் கிறிஸ்துவ பேரரசரான கொன்ஸ்தாந்தின் கி. பி. 315இல் புனித இராயப்பரின் சடலத்தைக் கல்லறையிலிருந்து எடுத்து, எலும்புத் துண்டுகளை அழகு வாய்ந்த ஒரு சுவர் மாடத்தில் வைத்து, அதன்மீது ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பினுரென்று வரலாற்று ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தின. பாப்பு 12ஆம் பத்திநாதரின் ஆதரவில் பேராசிரியை மார்கரீத்தா அம்மையார் தலைமையில் விஞ்ஞானிகளின் குழுவொன்று ஆராய்ச்சிகள் நடத்தியது. சுவர் மாடத்தில் "Petros Eni" (இராயப்பர் இங்கு உள்ளார்) என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்தன. புனித இராயப்பரைப்பற்றிய பல குறிப்புகளும் சுவரில் காணப்பட்டன. மாடத்தில் வைக்கப்பட்டிருந்த எலும்புத் துண்டுகளை 1962ஆம் ஆண்டு முதல் விஞ்ஞான முறையில் பரிசோதனை செய்யதொடங்கினுர்கள். கடந்த 6 ஆண்டு பரிசோதனைக்குப்பிறகு அவை புனித இராயப்பரின் எலும்புகள்தானென்று ஆராய்ச்சிக் குழு முடிவு செய்தது.

(Cath. Herald)

# புனித இராயப்பர் வாழ்ந்த வீடு

## கபர்ணுமில் கண்டுபிடிக்கப் பட்டது

புனித இராயப்பர் வாழ்ந்த வீட்டைக் கண்டுபிடிப்பதற்காகக் கடந்த 3 மாதங்களாக கபர்ணுமில சில அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆராய்ச்சிகளின் பயனுகப் புனித இராயப்பரின் வீடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அகழ்வாராய்ச்சிக் குழுத் தலைவர் பிரான்சிஸ்கன சபைக்குரு விர்ஜிலியோ கோர்போ, ஜெருசலேமில் அறிவித்துள்ளார்.

50 ஆண்டுகளுக்குமுன் கபர்ணுமில் ஒரு பழங்காலக் கிறிஸ்துவ கோவிலின சிதைவுகளும், யூதர்களின் ஒருசெபக் கூடமும் கண்டுபிடிக்கப்பட்டன. புனித இராயப்பரின் வீட்டின் மீதுதான் அந்தக் கோவில் கட்டியெழுப்பப்பட்டதென்ற ஒருபரம்பரை இருந்தது. இந்தக் கோவிலைச் சுற்றிப் பிரான்சிஸ்கன் சபையார் அகழ்வாராய்ச்சிகள் நடத்தினர். அங்குப் பலவீடுகளின் சுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு வீட்டுச் சுவர்களின்மீது ஏராளமான குறிப்புகளும் இராயப்பர் என்ற பெயருமபொறிக்கப்பட்டிருந்தன. செம்படவர்கள் வீடு கட்டப் பயன்படுத்திவந்த பொருள்களால் அந்த வீடுகள் அமைந்திருந்தன ஒரு வீட்டின் அடியில இரு தூண்டில்களும் கண்டுபிடிக்கப்பட்டன. கி. மு. முதல் நூற்றுண்டு தொட்டு கி. பி. இரண்டாம் நூற்றுண்டு வரை பயன்படுத்தப்பட்ட நாணயங்கள், விளக்குகள், சமையல் ஏதனங்கள் முதலியவையும் அங்குக் காணப்பட்டன.

அந்த வீடுகளுள் ஒன்று புனித இராயப்பர் வாழ்ந்த வீடுதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறுர்கள். புதைபொருளாராய்ச்சி தொடர்ந்து நடைபெறும்.

(சர்வ வியாபி)

# கருதினுல் மின்ட்சென்ரி ஆண்டகை

ஹங்கேரியதேச கருதினுல் மின்ட்சென்ரி ஆண்டகையின் நாமத்தை இந்நாட்களிலில எவரும் மிக அரிதாகவே கேட்கின்றனர். ஒருகாலத்திலே அது சர்வதேசவட்டாரங்களில ஏறக்குறைய ஒரு குடும்பப்பெயரேபோன்று அடிபட்டு வரலாயிற்று. ஆனல் இப்போது அவருடைய நாமம் மற்றுமோர்தரம் பத்திரிகைச்செய்திகளில வந்துகொண்டிருக்கிறது.

இப்பொழுது கருதினுல் மின்ட்சென்ரிஆண்டகை தமது 77 ஆம் வயதில் பிரவேசித்திருக்கின்றுர். இவர் இருபதுவருடங்களுக்குமேல் அந்நாட்டின் கம்யூனிஸ்த அரசாங்கத்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். ஹங்கேரிய திருச்சபையின் குருசிரேஷ்ட அதிகாரியான இவர் 1956 ஆம் ஆண்டின் அரசியற்புரட்சி ரூஷியர்களால் ஆயுதபலத்தைக்கொண்டு கரூரத்தனமாக அடக்கப்பட்டதிலிருந்து அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ற் நகரிலுள்ள அமெரிக்கதூதுவாலயத்தில் (தற்பொழுது இது ஸ்தானிகாலயம் ஆக்கப்பட்டுள்ளது) அடைக்கலம்புகுந்திருக்கிறுர்.

1947 ஆம்ஆண்டு கயோர்திருப்பதியில தேவதாயார்செய்த புதுமையின் 250 ஆம்ஆண்டு நிறைவுவிழாவின் போது இவர் பகிரங்கமாகக் காட்சியளித்தமையே ஞாபகப்படுத்தக்கூடிய கடைசியான சந்தர்ப்பங்களில ஒன்றுகும். இப்பொழுது கருதினுல்அவர்கள் சரித்திரத்தை—விசேடமாய்த் திருச்சபைச் சரித்திரத்தைப் படித்து ஒரு புத்தகம் எழுதுகிறுரென அறியப்படுகிறது.

அமெரிக்க ஸ்தானிகாலயத்தின் முன்பாக ஆயுதபாணிகளான காவல் வீரர்கள் நிரந்தரமாக நிறுத்தப்பட்டிருக்கிறுர்கள். அவர் அரைமணி நேரம் சரீராப்பியாசம் செய்கின்ற முற்றம் 30சதுரஅடிமாத்திரமே விஸ்தீரணமுடையது. அதுவும் மற்றும் அநேகஉயர்ந்த கட்டடங்களால் முற்றுக மேற்கொள்ளப்படுவது. இவர் சரீராப்பியாசம் எடுக்கும்போதெல்லாம் அதிகாரி ஒருவர் எப்போதும் உடன்செல்வதாகச் சொல்லப்படுகிறது.

● நியூசிலாந்திலே உடைந்த கண்ணுடிகள் பொலிஸ்நாய்களுக்குப்பெரும் அபாயத்தை உண்டுபண்ணுகின்றன. அதனுல் இரட்டுப் புடவையிலே பின்னல் வேலைப்பாடுசெய்த சப்பாத்துகள் அவற்றிற்குப் போடப்படுகின்றன. இவற்றை மவுணற்வடின் சிறைச்சாலைக் கைதிகள் செய்து கொடுக்கிறுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடனளிக்கும் தெய்வீகமன்னு

தோமாஸ்மூர் என்பவர் இங்கிலாந்துதேச மன்னனின் பிரதம மந்திரியாயிருந்தவர். அடிக்கடி திவ்வியசற்பிரசாதம் பெற்றுக்கொள்ளும் சுகிர்தவழக்கம் அவருக்கிருந்தது. அந்தமந்திரியாருடைய நண்பர்கள் அவரிடம் சென்று: மந்திரியாரே, உமக்கு அரசியல்கருமங்கள் அமோகமாயிருக்கின்றன; தினந்தோறும் பூசைகண்டு திவ்விய சற்பிரசாதம் பெற்று உமதுநேரத்தை வீணாக விரயமாக்கலாமா? நீர் சமுசாரியானமட்டில் குடும்பக்கவலைகளையும் கவனிக்கவேண்டியவர்; காலைநேரத்தைக் கோவிலில் போக்கினால் குடும்ப அலுவல்களைக் கவனிப்பது எங்ஙனம்? மேலும்நீர் அரசியல்வாதிகளோடும் பொதுமக்களோடும் நெருங்கிப் புழங்கிவருவதால் சோதனைகளுக்கும் குறைவிராது. இப்படியிருக்கத் தாம் அடிக்கடி திவ்வியசற்பிரசாதம் பெறுவது தகுதியாகுமா" என்று கேட்டனர்.

பத்திவிசுவாசமுள்ள அந்தப் பிரதம மந்திரியார் தமது நண்பர்களை நோக்கி: "அன்பர்களே, எனக்கு அரசாங்கவேலைகள் அதிகம் இருப்பது உண்மைதான்; அவ்வளவு வேலைகளையும் செவ்வையாகச் செய்துமுடிக்கத் தினமானம் என் புத்திக்குப் பிரகாசத்தையும், மனதுக்கு ஆற்றலையும் கொடுப்பது திவ்விய சற்பிரசாதமே, எனக்குக் குடும்பவேலைகளும் அதிகம்தான்; அவற்றை நிறைவேற்றத் தக்கதான ஊக்கத்தையும் அமைதியையும் சற்பிரசாதநாதரிடமிருந்துதான் பெற்றுக்கொள்ளுகிறேன். என் ஆத்தும நோயைக் குணப்படுத்தும் சர்வரோக நிவாரணி திவ்வியசற்பிரசாதமன்றி வேறெதுவுமில்லை. அற்பமனிதனாகிய எனக்குவரும் சோதனைகளை வெற்றிகொள்ள எனக்கு மாறாத் திடனளிக்கும் பரம அவுடதம் இந்தத் தெய்விக மன்னாவே" என்று மறுமொழி பகர்ந்தார்.

இந்தப்பிரதம மந்திரியாரின் அறிவுரையை நாம் ஒவ்வொருவரும் நன்றாக ஊன்றிச் சிந்திக்கவேண்டும்

ஒருவன்தான் எந்த அந்தஸ்திலிருந்தாலும் அந்த அந்தஸ்துக்குரிய கடமைகளைச் சுமுத்திரையாய் அனுசரிக்கவேண்டுமாகில் சகலநன்மைக்கும் ஊறணியாகிய திவ்வியசற்பிரசாதத்தைப் பெற்றுவரவேண்டும்.

இல்லறவாசிகளாயுள்ளோர் அடிக்கடி—ஏன்—நாள்தோறுந்தான் திவ்வியநன்மைபெற்று வரவேண்டியது மிக அவசியமாகும். நல்ல இல்லறவாழ்க்கை நடத்தவும், சந்தோஷமும் சமாதானமும் குடும்பத்தில் நிரந்தரமாக நிலவவும், குடும்பசீவியத்திலுண்டாகும் கஷ்டநஷ்டங்களைப் பொறுமையோடு சகித்துக்கொள்ளவும் வேண்டுமானால்திவ்வியநன்மை பெற்றுவர வேண்டும்.

குடும்பங்கள்பல பிரிந்துபோவதும், குடும்பசீவியம் கசப்பாயிருப்பதும், குடும்பத்தில் ஐமிச்சம், சச்சரவு, திருப்தியீனம், முதலியன நிலைகொள்வதும், அக்குடும்பத்தில் நற்கருணைநாதர் ஆட்சிகொள்ளாத தினாலேயாம்.

பற்பல சோதனைகளுக்குள் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளத்தக்க பெலத்தைத் தருபவர் நற்கருணைநாதரே.

பல தொல்லைகளுக்குள்ளும் பாவச்சோதனைகளுக்குள்ளும் அகப்பட்டு அமரிக்கையிழந்து அவநம்பிக்கையாக வாழ்பவர்களெல்லோரும் அடிக்கடி நன்மை பெற்றுவருவார்களானால் அமரிக்கையும் ஆறுதலுமுள்ள நல்வாழ்க்கையைக் கண்டடைவார்கள்.

அன்பே உருவாகிய எங்கள் கடவுள் தம்முடைய திருமரணத்தினால் மனிதரைப் பாவஅடிமைத் தனத்திலிருந்து மீட்டுவிட்டதுபோதாதென்றிராமல் அற்பபுழுக்களாகிய எங்களுக்குத் தம்முடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும் ஞானப்போசனமாகத் தந்திருக்கிறார்.

இந்தப் பரமபோசனத்தை நாம் எவ்வளவு தாழ்ச்சி, விசுவாசம், நன்றியறிந்த தோத்திரங்களோடு உட்கொள்ளவேண்டியது.

நித்திய ஸ்துதிக்குரிய தேவநற்கருணைக்குச் சதாகாலமும் ஆராதனையும், ஸ்தோத்திரமும், நமஸ்காரமும் உண்டாவதாக!

## சிங்களத்தில் புதிய ஏற்பாடு

ஐந்து கத்தோலிக்க இலங்கைக் குருமாரின் அயரா உழைப்பின்பயனாகப் புதிய ஏற்பாடு முழுமையாகச் சிங்களப் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது.

இக்குருமார் பின்வருவோரே:

வந். எட்மன்ட் பீரிஸ் ஆண்டவர்,
வண. பிதா டொன் பீற்றர்.
வண. பிதா அலெக்ஸ் பெர்னாந்து.
வண. பிதா டி. ஜே. அந்தோனி,
வண. பிதா அன்று பீற்றர் பெர்னாந்து.

ஏற்கனவே பழையஏற்பாடு வண. டி. ஜே. அந்தோனி சுவாமியாரின் முயற்சியால் சிங்களப் பாஷையில் சிலவருடங்களுக்குமுன் வெளிவந்துவிட்டது. இவ்வாறு பழைய புதிய ஏற்பாடுகள் சிங்களப் பாஷையில் வெளிவந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய சாதனையே.

## பிரித்தானிய அரசாங்கமும் வத்திக்கானும்

பரிசுத்த ஸ்தானத்தினிடமாக இருந்துவரும் பிரித்தானிய அரசாங்கத்தின் தூதுவர் அந்தஸ்தை ஓர்ஸ்தானிகர் அந்தஸ்துக்கு இப்போதைக்கு உயர்த்துவதில்லையென்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய ஒருமாற்றத்துக்குக் காலம் இன்னும் பக்குவமாகவில்லையா? என்று பிரதிநிதிகளில்ஒருவரான திரு. கோடன் காம்பெல்அவர்கள் அன்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டு அலுவல் மந்திரியான திரு. பிறெடெறிக் மூலே பேசியபோது, இதுகாரியம் பலமுறையும் திரும்பத்திரும்பப் பரிசீலனைசெய்யப்பட்டதென்றாலும் ஒரு மாற்றத்துக்கு இது தகுதியான காலமென்று தாம் நினைக்கவில்லையெனக் கூறினார்.

பரிசுத்தஸ்தானத்தினிடமாகவுள்ள பிறஅரசாங்கங்களின் ஸ்தானிகர்கள் தொகை ஏறக்குறைய 53ஆகும்; இவர்களில் எண்மர் பிரித்தானிய சாம்பிராச்சிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்; ஏனைய நாடுகளும் நாம் மாற்றஞ்செய்யும்வரை காத்துக்கொண்டிருக்கின்றன; மொறொக்கோ, சான் மறினோ, எத்தியோப்பியா, பிரித்தானியெனும் நான்குநாடுகள்மட்டுமே [illegible] கொண்டிருக்கின்றன [illegible] தோர் வில்லியம் ரீலிங் அவ்வேளை கூறலாயினர்.

### மரியப்பிள்ளை பிலுப்புப்பிள்ளை அவர்களின் மரண அறிக்கை

கரம்பொன் பிலுப்புப்பிள்ளையின் அருமை மனைவியும், மரியாம்பிள்ளை, மாட்டீன், லூர்துமலர் ஆகியோரின் அன்புத் தாயுமான மரியப்பிள்ளை காலமாகிவிட்டார்.

பலகாலம் நோய்வாய்ப் பட்டிருந்த இவர் இறுதியில் அந்திம தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று சென்ற 24-7-68இல் இப்பூவுலகை விட்டுச்சென்றார். மறுநாட்காலை கட்டளைக்குரவர் வண. குணசீலன் சுவாமிஅவர்களின் உருக்கமான செபக்கிருத்தியங்களோடு இனசனர், அனுதாபிகள் உட்பட, அன்னாரின் பூதஉடல் அர்ச். செபஸ்தியார் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதனைக் கண்ணுறுபவர்கள் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
பத்தாவும், சகோதரியும், பிள்ளைகளும், இனசனரும்.

கரம்பொன்

### திரு. சந்தியோ அந்தோனிப்பிள்ளை அவர்கள் மறைவின் 2-ம்வருட நினைவு

பிறப்பு: 26—12—1908. இறப்பு: 15—8—1966.

"சீவியத்தில் அவர்எம்மை நேசித்தார், மறைவில் என்றும் நினைவுகூருவோம்"

சர்வேசுரா, இரக்கம்புரிகிறதும், பொறுத்தல் அளிக்கிறதும் எப்பொழுதும் உமது திருவுளத்தின் இயல்பாமே. ஆதலால் இவ்வுலகத்தினின்று அழைக்கத் தேவரீர் திருவுளமான இவருடைய ஆத்துமத்தைச் சத்துருவசம் அளிக்காமலும், கடைசிபரியந்தம் அதைக் கைவிடாமலும் இருக்கத் தேவரீரைப் பிரார்த்திக்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறுவோர்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்.

42/5, மவுண் கார்மேல்வீதி,
யாழ்ப்பாணம்.

108-68

### ஜே. கிறிஸ்டோப்பர் சில்வாபிள்ளை அவர்களின் 8-ம்வருட நிறைவுதினம்

பிறப்பு: 1—2—1934. இறப்பு: 31—7—1960

"சீவியத்தில் என்னை நேசித்த அன்பர்களே
மரணத்தில் என்னை மறவாதீர்கள்."

நித்தியபிதாவே! விலைமதியாத திரு இரத்தத்தாலும், திருக்கண்ணீராலும் தோய்ந்த உமது திருக்குமாரன் யேசுக்கிறிஸ்துநாதருடைய விலைமதியாத திருமுகத்தைப் பார்த்து, மரணமடைந்த கிறிஸ்டோப்பர் சில்வாபிள்ளையின் ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

இதைக் கண்ணுறும் யாவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி அன்பாய்க் கேட்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தாயார், சகோதரி, மைத்துனர்.

### திருமதி மரியம்மா இராசேந்திரம் அவர்களின் தேகவியோகம்

யாழ்நகரில் மாட்டின்வீதியிலே வசித்துவந்தவரும், காலஞ்சென்ற திரு. ஜேக்கப் மனுவேற்பிள்ளையுடைய ஏகபுத்திரியும், மராமத்து இலாகாவில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு. சலோமோன் இராசேந்திரம் அவர்களின் பாரியாருமான திருமதி மரியம்மா இராசேந்திரம் நோய்வாய்ப்பட்டிருந்து, அந்திய தேவதிரவிய அனுமானங்கள் யாவும் குறைவறப்பெற்றுக் காத்திராப்பிரகாரமாகச் சென்ற 13-7-68 சனிக்கிழமை நண்பகல் காலஞ்செல்லலாயினர். பரிக்கும்போது இவருக்கு வயது 64.

இவர் தேவபக்தி, குருபக்தியிற் சிறந்து மாதருக்குள் மணிவிளக்காய் மாண்புடன் வாழ்க்கை நடாத்திவந்தார். மறுநாள் சாயந்தரம் இவரது பிரேத அடக்கமானது திரளான இனசனர் சிநேகிதர், அனுதாபிகள் மத்தியில் யாழ்- ஆசனக்கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரை இழந்து துயருறும் கணவர், புதல்விகள், மருகர், பேரர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகப் 12-ந் திகதி திங்கட்கிழமை காலை 6 மணியளவில் சஞ்சுவாம் கோவிலில் ஒரு திக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

R. I. P.

### விற்பனைக்கு!

பழைய புத்தகங்கள், அச்சடித்த பழைய தாள்கள் தேவையானோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 7759

சுவக்கீன் அந்தோனிப்பிள்ளை
கரையூர், யாழ்ப்பாணம்
— வழக்காளி.

எதிராக

பொன்னையா மத்தேசு
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
எதிராளி.

மடுத்தேசு முத்தையா
ஈச்சமோட்டைறோட்டு, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம் (Disclosed Party)

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 7759ஆம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1968-ம்ஆண்டு செப்ரெம்பர்மீ (புரட்டாதி) 4-ந்உ புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,657உம், 14-10-65 தொடக்கம் 3-11-67வரைக்கும் ரூபா 1,500-க்குப் 12வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும், கோட்டுச்செலவு 298ரூபா 49சதமும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளிஇறை, "அம்மையாவளவு" வரகுச்செய்கை நிலப்பரப்பு ஒன்றும், $16\frac{5}{19}$ குளியும், (ILM. VC & $\frac{5}{19}$ KLS) வான்பயிர் செய்பயிர்களும், வீடும் வடக்கெல்லையில் உள்ள கிணற்றுப் பங்கும் அத்திபாரமும், கற்கூசும், உள்ள மறுபொருட்களும். எல்லை: கிழக்கு — நீர்வாய்க்கால். வடக்கு — பொன்னையா யோசேப்பின் ஆதனம். மேற்கு — றோட்டு. தெற்கு — அந்திரேச செல்லத்துரையின் ஆதனம். இதுமுழுவதும்.

க. சரவணமுத்து,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

173, குருசோவீதி,
யாழ்ப்பாணம், 6-7-68.

116-68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையும் நம் நாடும்

(பி. சவரிமுத்து)

கத்தோலிக்க திருச்சபையானது சுமார் ஈராயிரம் வருடங்களுக்குமுன் எமது மீட்பராகிய யேசுக்கிறிஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அது வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அத்திவிருட்சத்தைப் போன்று இன்று உலகின் நாலாபாகங்களிலும் பரவிவளர்ந்து காட்சியளிக்கிறது. எவ்வாறு ஒருதாவரம் அதுவளரும் சூழல், சுவாத்தியம், உஷ்ணநிலை, பசளை, நிலத்தின் தன்மை ஆதியனவற்றிற் கேற்றதாகப் பலவித மாற்றங்களை அடைந்து பயனளிக்கிறதோ அவ்வாறே திருச்சபையும் தான் பணிசெய்யும் நாட்டுமக்களின் நிலைக்குத்தக்கதாகப் பற்பல மாற்றங்களை அடைந்தே தீரும். உண்மையாகவே இம்மாற்றங்கள் விசுவாசசத்தியங்களையோ ஒழுக்கக் கோட்பாடுகளையோ சார்ந்தனவாயிருக்க முடியாது. ஏனெனில், எமது திருமீட்பர் வெளிப்படுத்திய சத்தியங்கள் எல்லாக் காலத்துக்கும், எல்லா நாடுகளுக்கும் பொதுவான போதனைகளாகவே இருக்கின்றன. என்றாலும் திருச்சபைக்கும், அது பணிசெய்யும் நாட்டுக்கும் (அதாவது அங்கு வசிக்கும் மக்களுக்கும்) இடையில ஒரு நெருங்கிய தொடர்புண்டு.

எனவே ஒரு நாட்டிலுள்ள மொழி அல்லது மொழிகள் அந்நாட்டுத் திருச்சபையின் வழிபாட்டில் முக்கியஇடம் பெறவேண்டியிருக்கிறது. அல்லாவிடில் ஓர் அந்நியசமயம் அந்நியமொழியில் அந்நியமக்களால் நாட்டில் புகுத்தப்படுகிறது என்ற தப்பறையான எண்ணம் மக்கள் மனங்களில் எழக்கூடும். இதற்காகவே பூசைப்பலி தற்போது அந்தந்த நாட்டுமக்களின் மொழிமூலம் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. தேவதிரவிய அனுமானங்களும் சுதேசமொழிகளிலேயே வழங்கப்படுகின்றன தற்காலத்தில். திருச்சபை ஒருநாட்டு மக்களின் பண்பு, கலாச்சாரம், பாரம்பரியம், பழக்கவழக்கங்களைக் கவனித்தே கூடுமான அவற்றிற்கேற்ற முறையிலேயே தன் அனுசாரணைகளையும், கொண்டாட்டங்களையும் கொண்டு நடத்தவேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கமுடிபுகள் இப்படிப்பட்ட மாற்றங்களுக்குப் பூரண சம்மதமும் அங்கீகாரமும் தெரிவித்திருக்கின்றன. இலங்கைத் திருச்சபையைப் பொறுத்தமட்டில் சிங்கள — தமிழ் — முஸ்லீம் மக்களிடையே காணப்படும் பழக்கவழக்கங்கள், திருநாள்—பெருநாள் கொண்டாட்டங்கள் எவ்வளவுக்குத் திருச்சபையின் அனுசரணைகளில் நடைமுறைக்குக் கொண்டுவர முடியுமென்று ஆலோசிக்கப்படவேண்டியிருக்கிறது. எமது நாட்டில் காணப்படும் ஹிந்து, பௌத்த, இஸ்லாமிய சமயங்களுக்கும் எமது திருச்சபைக்குமிடையில் எவ்வாறு நல்லெண்ணங்களைப் பிறப்பித்து ஒரு சகோதரத்துவ தொடர்பில் எல்லாச்சமயங்களும் இலங்கையில் பாவிப் பயனளிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை நாம் அலசி ஆராய்ந்து அவற்றை வரவேற்க வேண்டும்.

**அரசியல் துறையில்** திருச்சபை ஒரு நடுநிலைக்கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகல்வேண்டும். இப்படிப்பட்ட கொள்கையை அவர்கள் கொண்டிருக்கின்றனர் என்பதைத் திருச்சபை அதிகாரிகள் பகிரங்கப்படுத்திப் பல அரசியல் கட்சிகளின் நல்லுறவைத் தேடவேண்டும். ஆனாலும் அரசியல் கட்சிகளுடன் நாம்விரும்பும் நல்லுறவுக்காகக் கடவுளின் கற்பனைகளையோ திருச்சபையின் போதனைகளையோ நாம் கைவிடக்கூடாது. சமூகசேவைத் துறையில் திருச்சபை இலங்கையில் தனியே அனாதசாலைகள், வயோதிபர் சாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்ற ஸ்தாபனங்களை நடத்திவந்த காலம் மலையேறிவிட்டது எனலாம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கமுடிபுகளின்படி திருச்சபை — கத்தோலிக்கர்— சமூகசேவைகளில் ஈடுபட்டிருக்கும் ஏனைய ஸ்தாபனங்களுடனும், சங்கங்களுடனும் சாதி, இன, மொழி, இடம்போன்ற எவ்வித வேறுபாடின்றி ஒத்துழைத்து, தம்மாலியன்ற உதவிகளை — சேவைகளை ஏழையெளியவர்களுக்குச்செய்ய முன்வரவேண்டும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள திருச்சபையானது அந்நாட்டுமக்கள் சகலருடனும் ஒன்றுசேர்ந்து அந்நாட்டுச் சமூகசேவைகளைச் செய்வதே தகுதியும் பயனுமுடையது. "ஒற்றுமையே பலமுடைத்து." கத்தோலிக்கர் தங்களை ஒருவிசேஷ சலுகைகளைத்தேடும் சமூகமாக நினைப்பதோ அன்றேல் நடப்பதோ திருச்சபையின் விருத்திக்கும், செல்வாக்குக்கும் அளப்பரிய நன்மைக்குப் பதிலாகத் தின்மையையே விளைவிக்கும். திருச்சபையின்மக்கள் ஏனைய சமயங்களிலுள்ள போதனைகளுக்கும், எங்கள் மதத்திலுள்ள போதனைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைவையென்று நன்கறியத் தெண்டிக்கவேண்டும். அதன்பின் அவற்றிலுள்ள உண்மைகளை அத்திவாரமாகக் கொண்டு எங்கள் சமயஉண்மைகளைப் பிறசமயத்தவர்களுக்கு எவ்வகையில் விளக்கமுடியுமென்று ஆலோசிக்க வேண்டும். இவற்றை நன்கறிந்தபின், பிறசமயத் தலைவர்களுடன் சேர்ந்து சமயஒற்றுமையை நாம நம்நாட்டில் ஏற்படுத்த நம்மாலான முயற்சிகள் எடுக்கவேண்டும். கூட்டுச்சங்கங்கள், கூட்டுப்பிரார்த்தனைகள் என்பன நடத்தப்படலாம். இலங்கைமக்களைப் பாதிக்கும் பலசமூகப் பிரச்சினைகளும் இருக்கின்றன உதாரணமாகச் சாதிப்பாகுபாடு, வேலையில்லாத் திண்டாட்டம், உணவுத் தட்டுப்பாடு, வீட்டுவசதிக் குறைவுஎன்பன அவற்றுட்சிலவாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் திருச்சபை கண்மூடிக்கொண்டு தனது சேவையைச் செய்யமுடியாது. அது பொதுமக்களின்நலனுக்காக முன்னணியில்நின்று அரும்பணி யாற்றவேண்டும். இறைவனால் படைக்கப்பட்ட சகலமக்களும் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்போன்ற உரிமைகளுக்கு உரித்தானவர்கள். "ஏழைமக்களின் குரலொலி கத்தோலிக்க திருச்சபை" என்ற நற்பெயரைப் பெறும் நோக்கத்துடன் கத்தோலிக்கமக்கள் கருத்துடன் கடமைபுரிய வேண்டும். புதுத் தொழில் நுட்பஸ்தாபனங்களை நிறுவி (அரசாங்கத்தின் உதவியுடன்) தொழில் துறைகளில் நாட்டுமக்களைப் பயிற்றி அவர்கள்தங்கள் நாளாந்தவருவாயைப் பெறக்கூடியவழியில் அவர்களை நடத்துவது திருச்சபையின் தவிர்க்கமுடியாத கடமையாக இருக்கிறது. தருமஉதவியைப் பொருளாக அல்லது பணமாக வறியவர்களுக்குக் கொடுப்பதிலும் பார்க்க, இப்படிப்பட்ட பயிற்சிநிலையங்கள் மிகவும் விரும்பத்தக்கனவே.

ஈற்றில் திருச்சபை தேசிய வீடமைப்புத் திட்டங்கள் போன்றவைகளில் பங்கெடுத்து நாட்டுமக்களின் நன்மையில் அவர்கட்கு இருக்கும் அக்கறையை வெளிக்காட்ட வேண்டும். ஏனெனில், நெருக்கமான வீடுகளும், வீட்டுவசதிக் குறைவுகளும் மக்களின் ஆன்மஈடேற்றத்துக்குப் பெரிய தடைகளாக இருக்கின்றன. எனவே திருச்சபையானது எமதுநாட்டுப் பல்வேறு பணிகளில் ஆர்வமுடன் பங்கெடுக்கவேண்டும்.

> "மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல, குறைகாண்பவனும் ஆவான். பிறர்குறையைக் காண்பவன் அரைமனிதன். தன்குறையைக்காண்பவன் முழுமனிதன்."
>
> — சொக்கிரீஸ்

# ஆரோகணமும் ஆரோபணமும்

தாய்மொழியிலேயே திருவழிபாடும் நடத்தப்படல்வேண்டும் என்னுங் கொள்கை உலகெங்கணும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழர் வதியும் இடங்களில் கத்தோலிக்க திருமறை வழிபாடுகள் தமிழிலே நடைபெற்று வருகின்றன. சமயக்கருத்துக்களையும்—விளக்கங்களையும் கொண்டதமிழ்ச் சொற்கள் நம்சமயத்தில் பண்டுதொட்டே தாராளமாய்ப் பாவிக்கப்பட்டு வருகின்றன. இப்பழைமை மிக்க சொற்களுள் பிரதானமானவை— **உத்தானம், ஆரோகணம், ஆரோபணம்** என்பன. **உத்தானம்:** யேசுபெருமான் மரித்து அடக்கப்பட்டு மூன்றாம்நாள் தாமாகவே உயிர்த்தெழுந்தருளினர். இதைக் குறிக்குந் திருநாள் **உத்தானத் திருநாள், உத்தானஞாயிறு** என வழங்கப்பட்டு வருகிறது.

திருமறைத் திருப்பலித் திருநாட்களைக் குறிக்கும் பழம்பெரும் தமிழ் மரபுச் சொற்களுள், சற்று மயக்கத்தைத்தருவன **ஆரோகணம், ஆரோபணம்** என்ற சொல்லுகளே. இவ்விரு சொற்களின் உரியகருத்துக்களையும் உய்த்தறிந்துகொள்வது நலமாயிருக்கும்.

ஆரோகணம் என்ற சொல்லின் கருத்தும், ஆரோபணம் என்ற சொல்லின் கருத்தும் வெவ்வேறானவை.

**ஆரோகணத் திருநாள்** வேறு; **ஆரோபணத் திருநாள்** வேறு; **ஆரோகணச் சம்பவம்** வேறு; **ஆரோபண நிகழ்ச்சி** வேறு; **ஆரோகணகீதம்** வேறு; **ஆரோபணகீதம்** வேறு; ஆரோகணஞாயிறு என்றோ, ஆரோபண ஞாயிறு என்றோ திருச்சபையில் எத்திருநாளும் கொண்டாடப்படுவதில்லை.

இவ்விரு சொற்களும் பொருளடிப்படையில் ஒருவித ஒருமைப்பாட்டைக் கொண்டனவென்றாலும், கருத்தடிப்படையில் வெவ்வேறு விளக்கங்களைக் கொண்டன.

ஆரோகணம் என்பதன் கருத்து— **எழும்புதல், ஏறுதல்** என்பன. ஆரோபணம் என்பதன் கருத்து— **உயர்த்தல்** (எழுப்பல்), **ஏற்றுதல்** என்பன. ஆரோகணம்— தானாகச்செய்யும் செயலைக் குறிக்குஞ்சொல். ஆரோபணம்—பிறர் செய்யும் செயலைக்குறிக்குஞ்சொல். நம்சமயத்தில், ஆரோகணம் யேசுநாதரின் சம்பவத்தைக் குறிக்கிறது; ஆரோபணம் தேவமாதாவின் சம்பவத்தைக்குறிக்கிறது. ஆரோகணம்—யேசுநாதர் **பரத்துக்கு ஏறிய** சம்பவத்தைக் குறிப்பது— ஆரோபணம்—தேவமாதா **பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட** சம்பவத்தைக் குறிப்பது.

ஆரோகணத்திருநாள்—யேசுநாதர் பரலோகத்துக்குத் தாமாக எழுந்தருளிய திருநாள். இது **விண்ணேறு விழா** எனத் தற்போது கொள்ளப்படுகிறது.

ஆரோபணத்திருநாள் — தேவதாய் **கடவுளால் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாள்.** இது தேவதாயின் **விண்ணேற்று விழா** எனக்கொள்ளப்படுகிறது.

ஆரோகணத்திருநாள், உத்தானத் திருநாளின்பின் நாற்பதாம்நாள் ஒரு வியாழக்கிழமையில் கொண்டாடப்படுகிறது.

ஆரோபணத் திருநாள் — ஆவணி மாதம் 15-ந்திகதி கொண்டாடப்படுவது. திருச்சபையில் ஆவணிமாதம் 15-ந்திகதி கொண்டாடுவது தேவதாய் விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆரோபணத் திருநாளாகும். நம் மருதமடுப்பதியில், ஆவணி 15-ல் சிறப்பாகக் கொண்டாடப்படுவது.

— ஆசிநாதன்

## உயிருள்ள....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சீவிப்பவன் திருச்சபைக்காகச் சீவிக்க வேண்டும், இறைமக்களே திருச்சபை. எல்லோரும் இறைமக்கள். எல்லோரின் ஆன்மீக சரீர நன்மைகளில் கவலையாய் இருப்பவனே கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் சாட்சியாய் இருக்கிறான். தன்னை முற்றாக ஒழித்துக் கிறிஸ்துவைத் தன்னில் பிரதிபலிக்கச் செய்பவனே கிறிஸ்துவால் சீவிப்பவன். இவனே கிறிஸ்துவுக்கு உன்னதசாட்சி. நாளாந்தம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கிறிஸ்துவைத் தன்னில் சீவிக்க விடுபவனே கிறிஸ்தவன். தன்கண்களையும் தன் பேச்சையும், தன்சிந்தனையையும் தன்குறிக்கோளையும் தன்னை முழுவதும் கிறிஸ்துகொண்டு நடத்தவிடுபவனே கிறிஸ்தவன். அவனிலே மெய்யாகவே கிறிஸ்து மாத்திரம் வசிக்கிறார். ஏனெனில் அவனுடைய சிந்தனை வாக்குக் கிரிகையாவும் கிறிஸ்துவுக்காகவே. அவன் செபிக்கும்பொழுதும் கிறிஸ்துவே அவனுக்காகப் பிதாவுடன் செபிக்கிறார். அவனில் பாவமுமில்லை மரணமுமில்லை. ஏனெனில் அவன் சிரஞ்சீவியான கடவுளில் கிறிஸ்துவால் என்றும் சீவிக்கிறான். இதுவே சகல மனிதர்களினதும் உன்னத குறிக்கோள்.

### ஆழம் தோல் அளவா?

எங்கள் விசுவாச ஆழம் தோல் அளவுமட்டுமா? அல்லது வேதசாட்சிகள் காட்டினதுபோல் தங்கள் உயிர் அளவு மட்டுமா? நத்தாரில் பட்டும் பட்டாசும் நல்ல சாப்பாடும், ஞானஸ்நானத்தில் அதிலும் கூடிய களியாட்டுக்களும் எங்களை வேதத்தின் சாட்சிகளாக்குமா? இல்லை இல்லை. கிறிஸ்துவை நாங்கள் ஏய்க்கமுடியாது. அவர் கடவுள். அவர் எங்களில் தன்னைக் காணவிட்டால் எப்படி எங்களைத் தனதுசாட்சிகள் என்று ஏற்றுக்கொள்ளுவார்? ஒரு சாட்சி, சாட்சி சொல்லுபவரின் பக்கமாய் இருத்தல்வேண்டும். பூரண சாட்சியாய் இருத்தல் வேண்டும். போலி வேடம் தன்னைக் காட்டிக்கொடுத்துவிடும். அதுவும் தேவனின் பார்வைக்குத் தப்பமுடியாது. எனவே புனித சின்னப்பர் மிகவும் அழகாய் அழைப்பதுபோல் "சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" கிறிஸ்து இருதயநாதர். அவரின் ஆட்சி அன்பின் ஆட்சி. இவ்வாட்சிகஷ்டதுன்பங்களைப் பாராது; சிலுவைகளையும் மரணத்தைத் தானும் பாராது. அன்புக்குண்டோ அடைக்கும்தாள்? கிறிஸ்துவின் சாட்சிகளும் அப்படியே இருத்தல் அவசியம். சிலுவை சுமக்கிறவர்களே! நீங்கள் பாக்கியவான்கள்! ஏனெனில் அதைக் கிறிஸ்துவின் அன்புக்காகச் சுமந்தால் அது கிறிஸ்துவொடு உலகத்தை இரட்சிக்கவல்லது. நரகமளவு தீர்க்கப்பட்ட ஆன்மாக்களை மோட்சமளவு உயர்த்தவல்லது. சபிக்கப்பட்டவர்களே என்று தேவன் தள்ளிவிடுபவர்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்று தேவனின் அரவணைப்புக்கு உரியவர்களாக்கும். இதுவே உண்மையான உயிருள்ள விசுவாசத்தின்பலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## மருதமடு ஆவணித் திருயாத்திரை

மருதமடுத் திருப்பதியில் நடக்தேறும் ஆவணித் திருநாளுக்குப் புகைபிரதமார்க்கமாகச் செலலும் யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு இந்த ஆவணிமாதம் 6-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை றெயில்-றோட் இணைப்புப் பிரயாண சேவையைப் புகையிரதப் பகுதி ஒழுங்கு செய்திருக்கிறது. மேலும், இந்த யாத்திரை சம்பந்தமாய் வழமையான புகையிரதங்களில் அதிகமான பெட்டிகள் இணைக்கப்படுவதுடன் அநேக விசேட புகையிரதங்களும் ஓட வைக்கப்படவிருக்கின்றன. திருநாள் முடிந்ததும் யாத்திரிகர்களைத் திரும்ப ஏற்றிச்செல்வதற்கெனப் 15-ம், 16-ம் திகதிகளில் பதினொரு விசேட புகை வண்டிகள் ஓடவிடப்படும்.

## பௌத்த குருவின் முறையீடு

"கட்சி அரசியல் சனசமூகத்திடையே சமாதானத்தையும், ஐக்கியத்தையும் கெடுத்து அழித்துவிட்டது; அரசியல் வேற்றுமைகள் சமய ஸ்தாபனங்களைத்தானும் பாதித்துவிட்டன; பௌத்த வாழ்க்கைமுறை அலட்சியஞ் செய்யப்பட்டு வருகிறது; கிராமங்களில்தானும் பிள்ளைகள் மேலைத்தேச நாகரீகமோடிகளைக் கண்டுபாவிக்கப் பழகியிருக்கிறார்கள்" என்று பம்பலப்பிட்டியிலே விஜயாராம பௌத்த கோவில் பிரதம பரிபாலனரான கனம். நாரத மகாதேரோ கட்டுக்குருந்தை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களுக்கு அன்று வெள்ளிக்கிழமை ஆற்றிய சொற்பொழிவில் சாற்றியிருக்கின்றார்.

## உள்நாட்டு உருளைக் கிழங்கு

அடுத்து நிகழும் 1969 ஆம் ஆண்டிலே உள்நாட்டில் விளைவிக்கப்படும் உருளைக்கிழங்கு சுயதேவையில் 75சத விகிதத்தைப் பூர்த்தி செய்யுமென்று அரசாங்கம் மதிப்பீடு செய்திருக்கிறது. அடுத்த வருடம் உள்நாட்டிலே 33,363 தொன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுமென விவசாய அதிகாரிகள் எதிர்பார்க்கின்றார்கள். இத்தொகை 1970-ம் ஆண்டுக்கெனக் குறிக்கப்பட்ட இலக்கிலும் 3,000 தொன் கூடியதாகும். உருளைக்கிழங்கு இறக்குமதித் தடை விதிக்கப்படுமுன் வருடமொன்றுக்குச் சுமார் 60,000 தொன் உருளைக்கிழங்கு இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது.

## இயந்திரப்படகுவிபத்து

கொழும்பிலிருந்து நயினாதீவை நோக்கி வந்துகொண்டிருந்த ஸ்ரீ அம்பிகைஎனும் புத்தம்புதிய இயந்திரப் படகானது காற்று மும்முரமாகவீசிக் கடல் கொந்தளித்தமையால் புத்தளத்திலே தலைவில்லுக் கடற்கரையிலிருந்து 300 பார்தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்தபோது சென்ற 28ஆம் திகதி காலை4 30மணிக்குப் பலத்த சூறாவளிக்காற்று வீசியதால் சேதமடைந்து கடலில் ஆழ்ந்துவிட்டது. அதிலுவந்தஐவரில் நீந்தத்தெரிந்த நால்வரும் பெருங்கஷ்டத்துடன் நீந்திக் கரையடைந்தனர். நீந்தத்தெரியாத சின்னத்தம்பி திருநாவுக்கரசு கடலில் அமிழ்ந்திவிட்டார். இவரின் சடலம் உருக்குலைந்த நிலைமையில் இருதினங்களின்பின் அங்கிருந்து ஆறுமைலுக் கப்பால் கண்டுபிடிக்கப்பட்டது.

## சிங்களவர் குடியேற்ற திட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்திலே சிங்களவர்களுக்கெனக் குடியேற்ற திட்டம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கஅதிபர் எடுத்துவருகின்றார். இதற்கென நாவற்குளிக்குச் சமீபமாகக் காணிதெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்முதலாவது கட்டத்தில் 500சிங்களவர் குடியேற்றப்படுவர்போல் தெரிகிறது.

## வருமானத்தில் 60 சத விகிதம்

"இலங்கையின் தேசிய வருமானத்தில் ஏறக்குறைய 60 சத விகிதமும் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதிலே செலவாகின்றது; அதனால், 40 சத விகிதமே அபிவிருத்தி வேலைகளுக்கென எஞ்சியிருக்கிறது; இந்தப்பணம் அவற்றிற்குப் போதாமையால், அரசாங்கம் பிற நாடுகளின் உதவியைத் தேடுவதற்குப் பலவந்தஞ் செய்யப்படுகிறது" என்று காலி நகர் றிச்மண்ட் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் தபால் - தந்திப் போக்குவரத்து மந்திரி திரு. மொண்டகு ஜயவிக்கிரம தெரிவித்திருக்கின்றார்.

## சிங்கள உத்தியோகத்தரும் தமிழ் மொழியும்

"தமிழ்ப் பகுதிகளில் சேவை செய்யச் சிங்கள உத்தியோகஸ்தர்கள் அனுப்பப்படுமுன் அவர்கள் மூன்று வருடங்களுக்குத் தமிழில் பயிற்சியளிக்கப்பட வேண்டு"மென்று கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களது ஐக்கிய சங்கத்தின் 10-வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டுவரப்படலாயிற்று. ஆனால், இது பிந்த "சிங்கள உத்தியோகஸ்தர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கும், தமிழ் உத்தியோகஸ்தர்களைச் சிங்களப் பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்படா" தென்று திருத்தப்பட்டு அரங்கேறியது. இந்தக் கூட்டத்திலே தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட இரு சிங்களக் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் தமிழ் தெரியாது பட்ட பாடுகளைப்பற்றி எடுத்துக்கூறினார்கள்.

## வரவு-செலவுத்திட்டமும் வரிகளும்

தேசிய அரசாங்கத்தின் நான்காவது புதிய ஆண்டிற்கான நிதிவருடத்திலே வரவு-செலவுத்திட்டத்தில் வரவுக்கு மேற்பட்டுள்ள செலவான 105கோடி ரூபாவையும் சமாளிக்குமுகமாக நிதிமந்திரி வெளியிட்டுள்ள யோசனைகளின்படி, தென்னங்கள்ளிலிருந்து வடிக்கப்படும் கழுத்துறைச்சாராயம் ஒருபோத்தல் 8ரூபாவிலிருந்து 10 ரூபாவாக உயரும். புகையிலைவரி கூட்டப்பட்டதைத் தொடர்ந்து சிகறெற் ஒன்றுக்கு ஒருசதம்வரை அதிகரிக்கும். மண்ணெண்ணெய், பெற்றோல், மா, சீனி, தீப்பெட்டி விலைகள் முன்போல இருந்துவரும். பூச்சீத்தை, வெள்ளைப் பப்ளின், சாயப்பப்ளின், லோங் குளோத் ஆகிய புடவைகளுக்கு முன்யார் ஒன்றுக்கு 25 சதமாக விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித்தீர்வை நீக்கப்படுவதால் இவற்றின்விலை குறையும்.

## இரண்டாவது மேயர்

மட்டக்களப்பு மாநகரசபையின் இரண்டாவதுமேயராகத் திரு. ஜே. எல். திசைவீரசிங்கம் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். இவரைப் பத்து அங்கத்தவரும், இவருடன்போட்டியிட்ட முன்னாள் மேயர் திரு. சி. இராசதுரை எம். பி. யை ஒன்பது அங்கத்தவரும் ஆதரித்தனர். திரு. எஸ். தர்மசேனு உதவிமேயராகத் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்.

## காணிக்குடியேற்றம்

முத்தையன்கட்டுக்குளக் குடியேற்ற திட்டத்தின்கீழ் உபஉணவுப்பொருள் செய்கைக்கென ஒன்பதாயிரம் ஏக்கரில் மூவாயிரம்பேர் குடியேற்றப்படவிருக்கின்றனர். 3 000 ஏக்கரில் மிளகாயும், 3,750 ஏக்கரில் வெங்காயமும், 2,250 ஏக்கரில பருப்பு வகைகளும் செய்கைபண்ணப்படும். ஆயிரம் படித்தவாலிபர்களும், காணியற்ற இரண்டாயிரம் ஏழைவிவசாயிகளும் குடியேற்றப்படுவார்கள்.

## புதியபொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணத்திலே புதியபொலிஸ் நிலையமொன்று இரண்டரைலட்சம் ரூபாசெலவிலே கட்டப்படவிருக்கிறது. கட்டடவேலை வருகிறஐப்பசிமாதம் ஆரம்பமாகி அடுத்தவருட மார்கழி மாதத்துள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பொலிஸ் நிலையம் இருந்துவரும் காணியிலேயே புதியபொலிஸ்நிலையம் இருமாடிகளைக் கொண்டதாய்க் கட்டப்படும்.

## அரிசி இறக்குமதி அரைவாசியாயிற்று

தேசிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் வருடந்தோறும் இறக்குமதி செய்யப்பட்டுவந்த அரிசியின் தொகை படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 6,41,000தொன். ஆனால், இவ்வருடம் இறக்குமதி செய்யப்படவிருக்கும் அரிசி 2,70,000 தொன்னாகும். அடுத்தவருடத்திலே இதனை 50,000 தொன்னால் குறைத்துவிட விவசாய-உணவு அதிகாரிகள் எண்ணுகின்றார்கள். இதற்குக் காரணம், 1965ஆம் ஆண்டுமுதல நல்ல அறுவடையும், நெற்செய்கை அதிகரித்திருப்பதுமாகும்.

## வரவு-செலவு மதிப்பீடு

வருகிற ஐப்பசிமாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்ற அரசாங்க புதியநிதிவருடத்தின் வரவு-செலவு மதிப்பீடு நிதிமந்திரியால் சனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி புதியநிதிவருடத்தின் செலவுமதிப்பு 337கோடியே 76லட்சத்து 91ஆயிரத்து 673ரூபாவாகும். வருமானமதிப்பு 232கோடியே 07லட்சத்து 09ஆயிரத்து 171ரூபாவாகும். அதனால் வரவிலும்பார்க்கச் செலவு 105கோடியே 69லட்சத்து 82ஆயிரத்து 502ரூபா கூடியதாகும். இலங்கையின் நிதிவருடச் சரித்திரத்திலே வருமானத்திலும் செலவு 100 கோடிக்குமேல் அதிகரித்திருப்பது இதுவே முதன்முறையாகும்.

## அப்பீல் செய்கின்றார்கள்

அன்று ஏககாலத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கணவர் டக்டர் டயமண்ட் குணரத்தின, அவரின் தாயார் லேரு குணரத்தின, இவர்களின் வேலைகாரி சோபியா ஆகியமூவரும் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் சிறை வைக்கப்படும பகுதியில் சிறைவாசஞ்செய்கின்றனர். சிறைக்கைதிகளுக்கான உடைகளையே அணிந்திருக்கின்றனர். மரணதண்டனையை எதிர்த்து இவர்கள் அப்பீல்செய்வதால் அப்பீலவழக்கின் தீர்ப்புவருகிறவரை இவ்விதமே வசித்துவருவர். கடந்த நாற்பது வருடங்களாக இலங்கையில் பெணகள்எவரும் தூக்கிலிடப்படவில்லை. அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை பிறகுச் சீவியகாலச் சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டுவரலாயிற்று.

## ஆயுள்வேத மருந்துகள்

பெருப்பாலான ஆயுள்வேத மருந்துகளின் இறக்குமதியைத் தடைசெய்வதற்குத் தீர்மானமாயிருக்கிறது. தற்போது இலங்கை வருடம்ஒன்றுக்குச் சுமார் 30லட்சம்ரூபா பெறுமதியான ஆயுள்வேதமருந்துகளை இறக்குமதி செய்கிறது. ஏற்கனவே நூற்றுக்கு மேற்பட்ட ஆயுள்வேத மருந்துவகைகளின் இறக்குமதி தடைசெய்யப்பட்டுவிட்டது. தனிப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களால் தயாரிக்கப்படமுடியாத பலவகைமருந்துகளை ஆயுள்வேதப்பகுதி தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

## அதிசய ஐஆர்-8 நெல்

கூடுதலான விளைவைக்கொடுக்கும் அதிசயநெல்லினமான 'ஐஆர்-8' எனுமநெல் அடுத்துவரும் பெரும்போகத்திலே 12,000ஏக்கரில் விதைக்கப்படவிருக்கிறது அதனால் அப்போகத்தில் அமோகமான நெல்விளைவை விவசாயபகுதி எதிர்பார்க்கின்றது. எல்லாமாகப் 15,000புசல் ஐஆர்-8 விதைநெல் விதைக்கப்படும். இதில் மூன்றிலொருபங்கு உள்நாட்டிலே கிடைக்கும், மீதிநெல் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும். இது வரண்டபிரதேசத்தில மட்டும் விதைக்கப்படும். ஏனெனில், ஈரலிப்பானபகுதியில் இது அதிகபலன் கொடுப்பதில்லை. சென்றமுறை ஆறு வரண்ட பிரதேசங்களில இந்தநெல் விதைக்கப்பட்டு ஏக்கரொன்றுக்கு 100 புசலுக்குமேல் விளைந்திருக்கிறது.

## பாடசாலைகளின் விடுமுறை

அரசாங்க பாடசாலைகள் தவணைப் பரீட்சைகள்முடிந்து சென்ற 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளன. அடுத்த புரட்டாசிமாதம் 1ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை அவைகள் மறுபடியும ஆரம்பமாகும்.

## புத்தளச் சிமெந்து

புத்தளத்தில் அமைக்கப்பட்டுவரும் புதியசிமெந்துத்தொழிற்சாலை வருகிற 1969ஆம ஆண்டு புரட்டாசிமாதம் செயற்பட ஆரம்பிக்கும். புத்தளச் சிமெந்துத் திட்டத்தின முதற்படிவம் அப்போது வேலைசெய்ய ஆரம்பித்து வருடம்ஒன்றுக்கு 2,20,000தொன் உற்பத்திசெய்யும. அதன் இரண்டாவதுபடிவம 1971-ல்வேலை செய்யத் தொடங்கி சிமெந்துச்செய்கையை இருமடங்கு அதாவது 4,40,000 தொன்னுக்கும். இருபடிவங்களுக்குமான மொத்தச்செலவு 16கோடிரூபாவாகும்.

## வலைப்பந்தாட்ட சப்பியன்கள்

வடபகுதியிலுள்ள மகளிர் கல்லூரிகள், கலாசாலைகளிடையே கல்விப் பகுதியின் ஆதரவில் நடைபெற்றவலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முடிவாக மேற்பிரிவில இளவாலை திருக்குடும்ப கன்னிகாமடக் கலாசாலையும், கீழ்ப்பிரிவில் உடுவில் மகளிர்கல்லூரியும சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.


உங்கள் கடிகாரங்களில்
எவ்வித பிழைகள்
ஏற்படினும்
எம்மிடம் காணபியுங்கள்.



கெனடி உவாச் வேக்ஸ்
85, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம்ஆடு ஆவணிமீ 10-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org